உ

கடவுள்துணை.

அதிவீரராமபாண்டியன்

செய்த

வெற்றிவேற்கை யென்னும்

நறுந்தொகை மூலமும்

மஹாவித்வான்

ம - ள - ள - ஸ்ரீ

காஞ்சிபுரம் - ராமஸ்வாமிநாயுடு அவர்களால்

இயற்றப்பட்ட

விருத்தியுரையும்.

இவை

பென்ஷன் சுபேதார், தஞ்சை, சாம்பசிவம்பிள்ளை

அவர்கள் குமாரர்

தஞ்சை. எஸ். குமாரசுவாமிபிள்ளை அவர்களால்

சென்னை:

பண்டித மித்திர யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

முதற்பதிப்பு.

1906.

All Rights Reserved.

கடவுள் துணை.

அதிவீரராமபாண்டியன்

செய்த

வெற்றிவேற்கை யென்னும்

நறுந்தொகை.

பொதுப்பாயிரம்.

விநாயக வணக்கம்.

பிரணவப் பொருளாம் பெருந்தகை யையங்கரன்
சரணவற் புதமலர் தலைக்கணி வோமே.

(பதவுரை.) பிரணவப்பொருள் ஆம் -பிரணவப் பொருளாகிய, பெருந்தகை - பெருந்தன்மையையுடைய, ஐங்கரன் - ஐந்து திருக்கைகளையுடையவராகிய விநாயகக்கடவுளின், சரணம் - திருவடியாகிய, அற்புதம் - ஆச்சரியகரமா யிருக்கிற, மலர் - செந்தாமரை மலரை, தலைக்கு - எமது சிரத்துக்கு, அணிவோம் - சிரோபூஷணமாகத் தரித்துக்கொள்வோம் (யாம்), -எ-று.

(கருத்துரை.) பிரணவார்த்த சொரூபராகிய விநாயகக் கடவுளின் திருவடித் தாமரைமலரை எமது சிரத்திற் கணியாகத் தரித்துக்கொள்வோம் யாம் என்பதாம்.

(விருத்தியுரை.) இது செயப்படுபொருளின்றி நிற்றலாற் பொதுப்பாயிரமெனக் காண்க. பிரணவப்பொருள்-பிரணவாக்கரத்தின் அர்த்தம். இப்பொருளாயிருத்தலே இவர்க்கு சொரூபமா யிருக்கையால், 'பிரணவப்பொருளாம் பெருந்தகையையங்கரன்' என்றார். சரணமலர் என வியையும். அணிவோம் அலங்கரித்துக் கொள்வோம் என்றவாறு. அணிவோம் என்பதற்கு வினைமுதலாகிய யாம் என்பது வரு

கிக்கப்பட்டது. தம்போல்வாரையு முளப்படுத்து அணிவோம் என உளப்பாட்டுத் தன்மைப்பன்மையாற் கூறினர். இவ்வாறு நான்முகத்து விநாயகவணக்கங் கூறுவது ஆன்றோ ரொழுக்க மாதலாலும், இந்நூலாசிரியர்க்கு விநாயகர் வழிபடுகடவு ளாதலாலும் இதுகூறப் பட்டது. கூறவே, தாம் எடுத்துக்கொண்ட நூல் இடையூறின்றி யினிது முடியுமென்பது கருத்து.

நூற்பயன்.

வெற்றிவேற்கை வீரராமன்
கொற்கையாளி குலசேகரன்புகல்
நற்றமிழ்தெரிந்த நறுந்தொகைதன்னால்
குற்றங்களைவோர் குறைவிலாதவரே.

(ப-ரை.) கொற்கை ஆளி - கொற்கைநகரை ஆள்வோனுகியும், குலசேகரன் - தன் குலத்துக்கோர் முடிபோற் சிறந்தவனுகியும் இருக்கிற, வெற்றி வேல் - வெற்றிவேலைத் தாங்கிய, கை - கையினையுடைய, வீரராமன் - அதிவீரராமபாண்டியனுனவன், புகல் - சொன்ன, நல் தமிழ் தெரிந்த - நல்ல தமிழாகிய கடலிலே யாராய்ந்தெடுத்த, நறுந்தொகை தன்னால் - (நன்மணித் திரள்போன்ற) இந்த நறுந்தொகை யென்னும் நீதிமொழிகளால், குற்றம் - (உயிர்களிடத்துள்ள) குற்றங்களை, களைவோர்-நீக்குவோர், குறைவு இலாதவர் - (தம் குறைகளை ஒருவர் தீர்க்கவேண்டாது) தமக்குத்தாமே குறைதீர்ந்தவராவர், எ-று.

(க-ரை.) அதிவீரராமபாண்டியன் செய்த இந்த நறுந்தொகையைக் கொண்டு உயிர்களிடத்துக் குற்றங்களைப் போக்குவோர் தம் குறைகளைத் தாமே யொழித்துக்கொண்டவருமாவர் என்பதாம்.

(வி-ரை.) குறை தீர்ப்பவரும் தீர்க்கப்படுவோருமாகிய இருதிறத்தாருள்ளும் தீர்ப்பவரைப் பிரித்து நிற்றலால், ஏகாரம் பிரிநிலைக்கண்வந்தது. நறமை - நன்மை. தொகை - தொகைச்சொல். படுப்பது நித்திரைசெய்தற்காதலால், படுத்து நித்திரை செய்தான் என

மிகைபடக்கூறுது படுத்தான் என்றுற்போல, தெரிந்தது எடுத்தற் காதலால் தெரிந்தெடுத்தலென மிகைபடக்கூறுது 'தெரிந்த' என்றுர். நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை யெனவே நற்றமிழாகிய கடலில் ஆராய்ந்தெடுத்த நன்மணித்திரள்போன்ற நறுந்தொகைச்சொற்கள் என்பது பெறப்பட்டது. நறுந்தொகை யென்னுங் களைகளை கருவியால் உயிர்களாகிய பைங்கூழின் குற்றங்களாகிய களைகளைப் பறித்தெறியு மரசராகிய உழவர் குறைவிலர் என நின்றமையால் இது இயைபுருவகவணியாமெனக் காண்க.

திருக்குறள் - செங்கோன்மை - கூ - ம் பாட்டு,

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்."

என்றுராதலால் இது அரசனை நோக்கிற்று. இதன் கருத்து விளங்கிக்கிடந்தது. இந்நூல் செய்தோன் இத்தொழிற்கு உரியவனுதலால் இவ்வாறு கூறுதற் கியைந்ததெனக் காண்க. இது சிறப்புப் பாயிரம். கொற்கை - மதுரைக்கருகிலுள்ள ஒரூர். சேகரம் தலையாதலால் குலசேகரன் என்பதற்குக் குலமாகியசரீரத்துக்குத் தலைபோலச் சிறந்தவன் என்றும், குலமாகிய தலைக்கு முடிபோல விளங்குவோன் என்றும் கூறிக்கொள்க. சேகரம் இடவாகுபெயராய் முடியை யுணர்த்திற்று. குற்றம்-உயிர்க்குற்றங்கள், அவை காமவெகுளி மயக்கங்கள் முதலாயின.

நூல்.

1. எழுத்தறிவித்தவன் இறைவனாகும்.

(ப-ரை.) எழுத்து - ஒருவனுக்கு எழுத்தோடுகூடிய இலக்கிய இலக்கண நூல்களை, அறிவித்தவன் - அறிவித்தவனாகிய ஆசிரியன், இறைவன் ஆகும் - (அவனுக்குக்) கடவுளாவன், எ-று.

(க-ரை.) ஒருவனுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியன் அவனுக்குக் கடவுளாவன் என்பதாம்.

(வி-ரை.) எழுத்து - ஆகுபெயர்.

"எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தால் [தின்
மொழித்திறத்தின் முட்டறுத்தோ னாகும்-மொழித்திறத்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்."

என்றாராதலால், எழுத்தறிதல் கடவுளை யறிதற்கும் வீடுபெறு தற்கும் காரணமாமாதலால் அதனை யறிவித்தோனைக் கடவுளென்னுது 'ஆகும்' என்றார். அக்கடவுள் பிறர்கடவுள், தன்கடவுள் ஆசிரிய னென்பது இதன்கருத்து. இன்னும் ஆசிரியனை,

"தெய்வத்தின் மதித்த றிரிபொன் றின்மை"

எனப் பிறருங் கூறுதல் காண்க.

இனி—திருக்குறள் - கல்வி - ரு - ம் பாட்டு,

"உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்,"

எனக்கூறிய திருவள்ளுவ நாயனார்க்கும் இதுவே கருத்தென்பதை, 'உடையார்மு னில்லார்போ லேக்கற்றும்' என்றதனானுங் காண்க. (க)

2. கல்விக்கழகு கசடறமொழிதல்.

(ப-ரை.) கல்விக்கு - (இவ்வாறு எழுத்தறிவிக்கிற ஆசிரியனுடைய) கல்விக்கு, அழகு - அழகாவது, கசடு அற மொழிதல் - (தன்னை வழிபட்டுக் கேட்போர்க்குக்) குற்றமறச் சொல்லுதலாம், எ-று.

(க-ரை.) எழுத்தறிவிப்போனுடைய கல்விக்கு அழகாவது தன் மாணவகருக்குக் குற்றமறச் சொல்லுதலாம்.

(வி-ரை.) கசடு - சந்தேகவிபரீதங்கள். (ஐயம் - திரிபு.) அற - ஒழிய. மொழிதல் - கடாவிடைகளான் விரித்துரைத்தல். இவ்வாறு சொல்லாவிடின் அவன் உலகத்தாரால் இகழப்படுவான் என்பது கருத்து. இதற்குதாரணம்:—

திருக்குறள் - சொல்வன்மை - கO - ம் பாட்டு,

"இணருழ்த்து நாறு மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்."

எனத் திருவள்ளுவ நாயனாருங் கூறுதல் காண்க. (உ)

3. செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்.

(ப-ரை.) செல்வர்க்கு - செல்வ முடையோர்க்கு, அழகு - அழகாவது, செழு - வளம் பொருந்திய, கிளை - வறிஞராகிய தமது உறவினருடைய குடும்ப பாரத்தை, தாங்குதல் - சுமத்தலாம், எ-று.

(க-ரை.) வறிஞராகிய தமது உறவினருடைய குடும்ப பாரத்தைச் சுமத்தல் செல்வர்க்கு அழகாகும் என்பதாம்.

(வி-ரை.) பெரும்பாரம் சுமந்து வருந்திவருவோருடைய வருத்தத்தைச் சுமைதாங்கி யேற்றுக்கொண்டு அவர்க்குச் சுகந்தருதல் போல, வறுமையால் வருந்துவோராகிய தமது சுற்றத்தாருடைய குடும்ப பாரச்சுமையைத் தாமேற்றுக்கொண்டு அவர்க்குச் சுகந்தருதல் செல்வர்க்கழகாகு மென்பது இதனாற்போந்த பொழிப்புப்பொருள். இவர் செல்வர் என்றமையாலும், செழுங் கிளை தாங்குதல் என்றமையாலும் உறவினர் வறிஞரென்பது விளங்கிற்று. செல்வத்திற் குறைந்தவரைச் செழுங்கிளையென்பா னென்னெனின், எக்காலத்தும் ஒருதன்மையராய்க் கூடிக்குலாவி யிருத்தற்குரிய நல்லுறவினராதலாலென்க.

இதற்குதாரணம்:—திருக்குறள் - சுற்றந்தழால் - ௪ - ம் பாட்டு,

"சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்." (௩)

4. வேதியர்க்கழகு வேதமுமொழுக்கமும்.

(ப-ரை.) வேதியர்க்கு - மறையோர்க்கு, அழகு - அழகாவது வேதமும் - வேதமோதுதலும், ஒழுக்கமும் - அதற்கேற்ப தமது ஒழுக்கங் குன்றாது நிற்றலுமாம், எ-று.

(க-ரை.) வேதமோதலும் அதற்கேற்ப நல்லொழுக்கில் நிற்றலும் மறையோர்க்கு அழகாவன வென்பதாம்.

(வி-ரை.) வேதமோதலினும் ஒழுக்கஞ் சிறந்ததென்பதுதோன்றுதற்கே அதனை யிறுதியில் வைத்தார். ஒழுக்கம் என வாளா கூறினரேனும் வேதமு மொழுக்கமும் என வேதமோதலை முன் வைத்ததனால் அதற்கேற்ப நல்லொழுக்கமென்பது தானே பெறப்பட்டது. வேதமும் ஒழுக்கமும் காரணகாரியங்கள். இவ்விரண்டனுள் வேதமோதுதலை மறந்தாலும் மீண்டும் பெற்றுக்கொள்ளலாம்; ஒழுக்கங் குன்றின் பிறப்புக்கெடுமென்பது இதனுற் போந்தபொருள்.

இதற்குதாரணம்:— திருக்குறள் - ஒழுக்கமுடைமை - ௪ - ம் பாட்டு,

> "மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
> பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்."

இதனுள், ஒத்து மறப்பினுமென் றொழியாது மறப்பினுங்கொளலாகும் என்றது மறந்தால் அவர் பிறப்புக் கெடுமென்பது நோக்கியெனக்காண்க. (௪)

5. மன்னர்க்கழகு செங்கோன்முறைமை.

(ப-ரை.) மன்னர்க்கு - அரசருக்கு, அழகு - அழகாவது, செங்கோல் முறைமை-செங்கோல் செலுத்து முறைமையேயாம், எ-று.

(க-ரை.) செங்கோல் முறைமையைச் செலுத்துதலே அரசருக்கு அழகாவது என்பதாம்.

(வி-ரை.) செவ்வியகோல் போலுதலால் செங்கோல் எனப்பட்டது. செங்கோல் முறைமையாவது மநுமுதலிய நூல்களால் விதிக்கப்பட்ட ராஜநீதியிற் றவறுது நடத்தல். முறைமை - கிரமம். அரசன் செங்கோல் செலுத்துவனுயின் அவனுக்குப் புகழ் நிலைபெறும், செலுத்தானுயின் புகழ் நிலைபெறுது என்பது இதன் பொழிப்புப்பொருள்.

இதற்குதாரணம்:— திருக்குறள் - கொடுங்கோன்மை-கூ-ம் பாட்டு,

"மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேல்
மன்னாவா மன்னர்க் கொளி." (ரு)

6. வணிகர்க்கழகு வளர்பொருளீட்டல்.

(ப-ரை.) வணிகர்க்கு - வைசியர்க்கு, அழகு - அழகாவது, வளர் - வளர்கின்ற, பொருள் - பொருளை, ஈட்டல் - சேர்த்து வைத்தலாம், எ-று.

(க-ரை.) மேன்மேலும் வளர்கின்ற பொருளைச் சேர்த்துவைத்தல் வைசியர்க்கு அழகாகு மென்பதாம்.

(வி-ரை.) கொள்வதும் கொடுப்பதும் ஆகிய இரண்டினும் நடுவுநிலைமை தவறாமையால் தானே வளருமென்பது தோன்ற, 'பொருள்' என்னாது 'வளர்பொருள்' என்றார். இவ்வாறு வளர்பொருளீட்டினார்க்கு ஏனைய அறங்களும் இன்பங்களும் எளியவாகி அவரையழகுசெய்யுமென்ப திதனாற் போந்தபொருள்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - பொருள்செயல்வகை - கO - ம் பாட்டு,

"ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொருள்
ஏனை யிரண்டு மொருங்கு."

"வைசியர்க்கழகு......" என்றும் பாடம். (சு)

7. உழவர்க்கழகே ருழு தூண்விரும்பல்.

(ப-ரை.) உழவர்க்கு - பூவைசியருக்கு, அழகு - அழகாவது, ஏர் உழுது - (நிலத்தை) ஏரினாலுழுது (பயிர்செய்து), ஊண் - உண்பதையே, விரும்பல் - விரும்புதலாம், எ-று.

(க-ரை.) உழவர்க்கு நிலத்தை யுழுது பயிர்செய் துண்ண விரும்புதலே அழகாகும் என்பதாம்.

(வி-ரை.) உழவர் - நிலத்தையுழுது பயிர்செய்வோர் என்னும் பொருள் போதரநின்றது. ஊண் - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். இது உண்ணப்படுவதாகிய உணவைக் குறித்தது. உழவர்க்கழகே

குழுதூண்விரும்பல், மற்றொருவகையான் வருமூண் விரும்பல் அழகன்றென்பதும் பெறப்பட்டது. இவ்வாறு விரும்பின் இவரோரின் பின்யாவரும் செல்லவேண்டுவரேயன்றி, அவர் சேரின்பின்னே இவர் செல்லவேண்டாமை தானே பெறப்பட்டது.

இதற்குதாரணம்:—திருக்குறள் - உழவு - ௬ - ம் பாட்டு,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்."

"உழவர்க்கழகிங் குழுதூண்விரும்பல்" என்றும் பாடம். (எ)

8. மந்திரிக்கழகு வருபொருளுரைத்தல்.

(ப-ரை.) மந்திரிக்கு - அமைச்சனுக்கு, அழகு - அழகாவது, வரு பொருள் - இனிவரப்போகிற காரியங்களை, (முன்னேயறிந்து) உரைத்தல் - அரசனுக்குச் சொல்லுதலாம், எ-று.

(க-ரை.) இனி வரப்போகிற காரியத்தை முன்னே யறிந்து அரசனுக்குச் சொல்லுதல் மந்திரிக்கு அழகாகு மென்பதாம்.

(வி-ரை.) இவ்வாறு முன்னறிந்து சொல்லுதல் அவனுக்குஅழகாதலாவது தான் குற்றத்தி னீங்குதலாம்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - அமைச்சு - அ - ம் பாட்டு,

"அறிகொன் றறியா னெனினு முறுதி
உழையிருந்தான் கூறல் கடன்."

அறி கொன்று - அறிந்து சொன்னதையுந் தள்ளி. (அ)

9. தந்திரிக்கழகு தறுகண்ணாண்மை.

(ப-ரை.) தந்திரிக்கு - படைத்தலைவனுக்கு, அழகு - அழகாவன, தறுகண் - (போர்செய்யுங்கால்) இரக்கமில்லா திருத்தலாகிய பேராண்மையும், ஆண்மை - மிக்க உபகாரியாந் தன்மையாகிய ஊராண்மையுமாம், எ-று.

(க-ரை.) போர்க்களத்தில் இரக்கமின்மையும், பகைவரிடத்தில் உபகாரகுணமுமே படைத்தலைவனுக்கு அழகாவன என்பதாம்.

(வி-ரை.) ஊராண்மை ஆண்மையெனக் குறைந்து நின்றது. போர்செய்யுங்கால் பகைவர்மேல் இரக்கம்வையாது போர்செய்தலும், போர்செய்யுங்கால் அவர்க்கொரு தாழ்வுண்டாயின் அதற்கிரங்கி உதவிசெய்தலும் அறமாதலால் 'அழகு' என்றார்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - படைச்செருக்கு - ௩-ம் பாட்டு,

"பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றத னெஃகு."

ஊராண்மை - மிக்கவுபகாரியாந்தன்மை. அது இலங்கையர்கோன், தன் சேனைகளெல்லா மடிந்து தான் தனியே நின்றது கண்டிரங்கி, இன்றுபோய் நாளைவா வென்று அயோத்தியர் கோமானாகிய சக்ரவர்த்தித் திருமகன் சொல்லிவிடுத்தது போல்வது. தந்திரம் - சேனை. அதனையுடையவனாதலால், சேனைத் தலைவனுக்குத் தந்திரியெனப் பெயர் வழங்கிற்று. தறுகணாண்மை யென்பதற்கு அஞ்சாமையை ஆளுந்தன்மை யென்றுரைத்தலுமாம். (௯).

10. உண்டிக்கழகு விருந்தோடுண்டல்.

(ப-ரை.) உண்டிக்கு - (ஒருவனது) போஜநத்துக்கு, அழகு - அழகாவது, விருந்தோடு - விருந்தினரோடு கூடியிருந்து, உண்டல் - உண்பதேயாம், எ-று.

(க-ரை.) விருந்தினரோடு கூடியிருந் துண்பதே ஒருவனது போஜநத்துக்கு அழகாவ தென்பதாம்.

(வி-ரை.) விருந்து - பண்பாகுபெயர். விருந்தினர்: பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும், அது இன்மையிற் குறியாது வந்தாரும் என இருவகையர். இங்கு விருந்தென்றது அவ்விருவகையினரையுமே. உண்டிக்கழகு விருந்தோடுண்டல் என்றமையால் அவ்வாறுண்ணாமை உண்டிக் கழகன்றென்பது பெறப்பட்டது. தனித்துண்பதற்கு வறுமையும் இழிவும் உண்டாமாதலால் விருந்தோடுண்டல் அழகாயிற்று. இதற்கு உதாரணம்:—

திருக்குறள் - ஈகை - ௯ - ம் பாட்டு,

"இரத்தலி னின்னுது மன்ற நிரப்பிய
தாமே தமியர் ருணல்."

இதனுள், நிரப்பிய வென்பதற்குப் பொருள், தம் வயிற்றை நிரப்பும்பொருட்டு என ஆத்திசூடியுரையி லுரைத்தாங்குரைத்துக் கொள்க. (கo)

11. பெண்டிர்க்கழ கெதிர்பேசா திருத்தல்.

(ப-ரை.) பெண்டிர்க்கு - மாதர்க்கு, அழகு - அழகாவது, எதிர் பேசாது - தம் கணவருக் கெதிர்நின்று பேசாமல், இருத்தல் - அடங்கியிருத்தலாம், எ-று.

(க-ரை.) தம் கணவருக் கெதிரேநின்று பேசாம லடங்கியிருத்தலே மாதர்க்கழகாவ தென்பதாம்.

(வி-ரை.) எதிர் பேசாதிருத்தல் என்பதற்கு எதிர்த்துப் பேசாதிருத்தல் எனப் பொருள் கூறலுமாம். எதிர்நின்று பேசுதலாகிய அடங்காமை அவரைத் தாழச்செய்தலால், பேசாதடங்குந் தன்மை அவரை மேன்மேலு முயர்த்தி அவர்க்கு அழகு செய்யுமென்ப திதனுற்போந்த பொருள். இது குலமாதர் விலைமாதர் என்னும் இருதிறத்தார்க்கும் பொதுவாய் நின்றது.

இதற்குதாரணம்:—திருக்குறள் - அடக்கமுடைமை - க - ம் பாட்டு,

"அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
ஆரிரு ளுய்த்து விடும்." (கக)

12. குலமகட்கழகுதன் கொழுநனைப்பேணுதல்.

(ப-ரை.) குலமகட்கு - குலப்பெண்ணுக்கு, அழகு - அழகாவது. தன் - தன்னையும், கொழுநனை - தன்கணவனையும், பேணுதல் - பாதுகாத்தலாம், எ-று.

(க-ரை.) குலமாதுக்குத் தன்னையும் தன் கணவனையும் பாதுகாத்தலே அழகென்பதாம்.

(வி-ரை.) தன் என்பதில் ஐயுருபும் எண்ணும்மையும் தொக்கு நின்றது. பொதுப்படப் பேணுதல் என்றமையால் தன்னைக் கற்பில் வழுவாமலும், தன் கணவனை அவன் சொல்லிலும் உணவுதவல்முத லிய வுபசாரங்களிலும் வழுவாமற் பாதுகாத்தலும் அடங்கும். இவ் வாறு பாதுகாத்தலே கற்பிற்கு இலக்கணமாதலால் குலமகட்கு அழ காயிற்று. இதற்குதாரணம்:—

திருக்குறள் - வாழ்க்கைத் துணைநலம் - ரு - ம் பாட்டு,

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

தன்கொழுநனை யென்பதற்குத் தன்கணவனை யென்றுரைத் தலுமொன்று. (கஉ)

13. விலைமகட்கழகுதன் மேனிமினுக்குதல்.

(ப-ரை.) விலைமகட்கு - விலைமாதுக்கு, அழகு - அழகாவது, தன் மேனி - தன் உடம்பை, மினுக்குதல் - மஞ்சள்முதலியவற்றால் விளங்கச்செய்தலாம், எ-று.

(க-ரை.) விலைமாதுக்குத் தன்னுடம்பை மஞ்சள் முதலியவற் றால் விளங்கச்செய்தலே அழகாவதென்பதாம்.

(வி-ரை.) மேனி மினுக்குதலாவது - உடம்பை மஞ்சள், பரி மளதிரவியங்கள், மலர்மாலை, பட்டாடை, பொன்மணிப் பணிகள் முதலியவற்றால் அலங்கரித்துக் கொள்ளுதல். இவள் தெய்வப்பெ ண்போல நின்று அறிவிலாப் புருடரை மயக்கி வஞ்சிப்பதற்கு இவ் வலங்காரமே கருவியாதலால், 'விலைமகட்கழகுதன் மேனிமினுக்கு தல்' என்றார். இது அவளுக்கு அழகாயினும் அறிவிலாரை மயக்கி வஞ்சித்துக் கொல்வதற் கேதுவாதலால் அவர்க்கு விடமாமென்றது மாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் : வரைவின்மகளிர் - அ - ம் பாட்டு,

"ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு."

தம்மேனியையினுக்கி மாயமகளிர் அறிவிலாரைத் தீண்டுவேது, காமநெறியால் உயிரைக் கவரவந்த தெய்வமகளிர் தீண்டுவேதுபோலு மென்பர் என்பதிதன்பொருள். (௧௩)

14. அறிஞர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்.

(ப-ரை.) அறிஞர்க்கு - அறிவுடையோர்க்கு, அழகு - அழகாவது, கற்று - கற்கவேண்டிய நூல்களையெல்லாங் கற்று, உணர்ந்து - அவற்றின் பொருளை ஐயந்திரிபற அறிந்து, அடங்கல் - (அக்கல்வியுணர்ச்சிகட் கேற்பத் தம்முடைய மனமொழி மெய்கள்) அடங்கியிருத்தலேயாம், எ-று.

(க-ரை.) கற்றுணர்ந்தடங்கலே அறிஞர்க்கழகாவ தென்பதாம்.

(வி-ரை.) அறிஞர் என்பதில் ஞகரம் பெயரிடைநிலை. கற்கவேண்டிய நூல்கள் என்றது அறிவுநூல்களை. அறிவுநூல்களைக் கற்றுணர்ந்தாலன்றி மனமொழிமெய்க ளடங்காவாதலால், கற்று என்பதற்கு அறிவுநூல்களைக் கற்று எனப் பொருளுரைக்கலாயிற்று. மனமொழிமெய்களை முக்கரண மென்பர். கற்றுணர்ந்தடங்காமை பேதைமையாதலால் கற்றுணர்ந்தடங்கல் 'அழகு' என்றார். இவ்வாறடங்கி யிருப்பின் அறக்கடவுள் ஏவல்செயு மென்பதாம்.
இதற்குதாரணம்:—திருக்குறள்- அடக்கமுடைமை - ௩0 - ம் பாட்டு,

"கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
அறம்பார்க்கு மாற்றி னுழைந்து."

இச்சூத்திரத்துள் அடங்கல் என்பதில் மனத்தின்கண் வெகுளி தோன்றுமற் காத்தலு மடங்கிநிற்றல் காண்க. (௧௪)

"அறிவோர்க்கழகு..." என்றும் பாடம்.

15. வறிஞர்க்கழகு வறுமையிற்செம்மை.

(ப-ரை.) வறிஞர்க்கு - தரித்திரர்க்கு, அழகு - அழகாவது, வறுமையில் - வறுமைக்காலத்திலும், செம்மை - செவ்வனே யிருத்தலாம், எ-று.

(க-ரை.) வறுமைக்காலத்திலும் செவ்வனே யிருத்தலே வறியோர்க்கு அழகாவ தென்பதாம்.

(வி-ரை.) "வறியோர்க்கழகு" என்றும் பாடம். செம்மை-ஒழுக்கமும் நாணும் கெடாதிருக்குந் தன்மை. என்னெனின், வறுமைவந்ததென்று ஒழுக்கத்தைக் கைவிட்டால் குலத்தார் நிந்திப்பார், நாணத்தைக் கைவிட்டால் அறக்கடவுள்காயும், ஆதலால், இரண்டையும் கைவிடாதிருத்தலே செம்மை யென்றதாயிற்று.

இதற்குதாரணம்:—திருக்குறள் - நாணுடைமை - கூ - ம் பாட்டு,

"குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை."

ஆதலால், வறுமையிற் செம்மையெனச் சென்றொட்டுதலால், திருவள்ளுவநாயனாரு மிவ்வாறு கூறினா ரெனக்காண்க. கொள்கை-ஒழுக்கம். இதற்குப் பரிமேலழகர் குலத்தைக் கெடுக்கும் நலத்தைக் கெடுக்கும் எனப் பொருள்கூறினார். குலஞ்சுடுதல் - குலத்தார் நாவினாற்சுடுதல், "ஆறாதே, நாவினாற் சுட்ட வடு" என வருதல்காண்க. நலம் - அறம். அன்பிலதனை யறங்காயும் என வருதலால், நலஞ்சுடும் என்பதற்கு அறக்கடவுள் காயும் என்றுரைத்துக்கொள்க.

16. (1) தேம்படுபனையின் றிரள்பழத்தொருவிதை
வானுறவோங்கி வளம்பெறவளரினும்
ஒருவற்கிருக்க நிழலாகாதே;
(2) தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை
தெண்ணீர்க்கயத்துட் சிறுமீன்சினையினும்
நுண்ணிதேயாயினு மண்ணல்யானை
அணிதேர்ப்புரவி யாட்பெரும்படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே;

(3) ஆதலால்,

(4) பெரியோரெல்லாம் பெரியருமல்லர்;
(5) சிறியோரெல்லாஞ் சிறியருமல்லர்;
(6) பெற்றோரெல்லாம் பிள்ளைகளல்லர்;
(7) உற்றோரெல்லாம் உறவினரல்லர்;
(8) கொண்டோரெல்லாம் பெண்டிருமல்லர்.

(1) (பதவுரைமுதலியன.) தேம்படு-மதுரம்பொருந்திய, பனையின்-பனையினது, திரள் - திரண்ட, பழத்து - கனியினது, ஒரு விரை - ஒரு விரையானது, வான் உற - ஆகாயத்தைத் தீண்டும்படி, வளம் பெற வளரினும் - செழுமையுண்டாக வளர்ந்தாலும், இருக்க - இருப்பதற்கு, ஒருவற்கு - ஒருவனுக்காயினும், நிழல் ஆகாது - நிழலைத் தராது; ஏகாரம் - ஈற்றசை, (தேம்படுபழம் எனக்கூட்டுக.)

(2) ஆலின் - ஆலினது, தெள்ளிய - தெளிவாகிய, சிறு பழத்து - சிறிய கனியிலுள்ள, ஒரு விரை - ஒரு (சிறிய)வித்தானது, (ஆலின் சிறுபழம் எனக்கூட்டுக.) தெள் - தெளிவாகிய, நீர் - நீரையுடைய, கயத்துள் - தடாகத்திலிருக்கிற, சிறு மீன் - சிறிய மீனினது, சினையினும் - முட்டையைக் காட்டிலும், நுண்ணிதே ஆயினும் - நுட்பமானதாகவே யிருந்தாலும், அண்ணல் - பெருமை பொருந்திய, யானை - யானையும், அணி தேர் - அழகுபொருந்திய தேரும், புரவி-குதிரையும், பெரு - பெரிதாகிய, ஆள் படையொடு - காலாளுமாகிய சேனையுடனே, மன்னர்க்கு - அரசருக்கு, இருக்க-தங்கியிருக்க, நிழல்ஆகும்-நிழலைத்தரும்.

(3) ஆதலால்—அதுபோல,

(4) பெரியோர் எல்லாம் - உருவினால் பெருமையுடையோ ரெல்லாரும், பெரியரும் அல்லர் - பெருமையுடையோருமல்லர், (என்றமையால்) குணம் தொழில் கல்வி முதலியவற்றால் சிறியராகவுமிருப்பார்க ளென்பது குறிப்பெச்சம். உம்மை எதிரதுதழீஇயது. அவர் வடிவு நோக்கிப் புகழலாகாதென்பது கருத்து.

இதற்குதாரணம்:—திருக்குறள்-ஊக்கமுடைமை-கூ-ம் பாட்டு,

"பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்."

சிறியோர் எல்லாம் - உருவினால் சிறியராயிருப்பவ ரெல்லா ரும், சிறியரும் அல்லர் - சிறியராகவே யிரார்கள், (என்றதனால்) குணம் தொழில் கல்வி முதலியவற்றில் பெரியராகவு மிருப்பார்கள் என்பது குறிப்பெச்சம்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - வினைத்திட்பம் - எ - ம் பாட்டு,

"உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து."

பெற்றோர் எல்லாம் - ஒருவர் பெற்ற பிள்ளைக ளெல்லாரும், பிள்ளைகள் அல்லர் - பகிரதன் முதலியோர்போல நல்ல பிள்ளைக ளாகவே யிரார்கள்; துரியோதனன் முதலியோர்போலக் கெட்டபிள் ளைகளாகவு மிருப்பார்கள் என்பது குறிப்பெச்சம். உம்மை குறைந் துநின்றது.

இதற்குதாரணம்:—திருக்குறள்-புதல்வரைப்பெறுதல் உ-ம் பாட்டு,

"எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்."

இக்குறளின் எதிர்மறை முகத்தால் கெட்ட பிள்ளைகட்கு உதாரணமுங் காண்க. பெற்றோர் கொண்டோர் என்பன, யானுண் டது சோறு என்புழிப்போலச் செயப்படுபொருள் வினைமுதல்போ னின்றன.

உற்றோர் எல்லாம் - உறவினரெல்லாரும், உறவினர் அல்லர் (துரியோதனனுக்கு விதுரன் கர்ணன் முதலியோர்போல, நல்லுறவி னராகவே யிரார்கள்; சல்லியன் சகுனி முதலியோர்போலக் கெட் டவுறவினராகவு மிருப்பார்கள் எனக்கொள்க. இத்தொடர்க்கும் உம்மை விகாரத்தாற் றொக்கது.

இதற்குதாரணம்:—திருக்குறள் - சுற்றந்தழால் - உ - ம் பாட்டு,

"விருப்பறுச் சுற்ற மியையி னருப்பறு
வாக்கம் பலவுந் தரும்."

இதன் எதிர்மறை முகத்தால் கெட்ட சுற்றத்திற்கும் உதாரணங் காண்க.

கொண்டோர் எல்லாம் - கொள்ளப்பட்ட மனைவிய ரெல்லாரும், பெண்டிரும் அல்லர்-அருந்ததி முதலியோர் போலக் கற்புடை மனைவியராகவே யிரார்கள்; தீங்குடை மனைவியராகவு மிருப்பார்கள் எனக்கொள்க.

இதற்குதாரணம்:—திருக்குறள் - வாழ்க்கைத் துணைநலம் - ௫ - ௨ - ம் பாட்டுகள்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

"மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினு மில்"

இவற்றை இருதிறத்தார்க்கும் உதாரணமாகக் கொள்க.

தேம்படுபனையின் என்பது முதல் பெண்டிருமல்லர் என்னுமளவும் ஒரு தொடர். இதனுள், தேம் - நிழலாகாதே என்பதும், தெள் - நிழலாகும்மே என்பதும் எடுத்துக்காட்டுவமையெனக் கொண்டு, ஆதலால் அதுபோல என்பதைக் கூட்டி, பெரியோரெல்லாம் பெரியருமல்லர், சிறியோரெல்லாஞ் சிறியருமல்லர், பெற்றோரெல்லாம் பிள்ளைகளல்லர், உற்றோரெல்லா முறவினரல்லர், கொண்டோரெல்லாம் பெண்டிருமல்லர் என முடித்துப் பொருள் காண்க.

இத்தொடரின் கருத்து: பெருமை பெருமையேயாகாது, சிறுமை சிறுமையேயாகாது; பெருமையினுஞ் சிறுமையுண்டு, சிறுமையினும் பெருமையுண்டு என்பதாம். (௧௬)

17. (1) அடினும் பாவின்பா றன்சுவைகுன்றாது;

(2) சுடினுஞ்செம்பொன் றன்னொளிகெடாது;
(3) அரைக்கினுஞ்சந்தநந் தன்மணமறாது;
(4) புகைக்கினுங்காரகில் பொல்லாங்குகமழாது;
(5) கலக்கினுந்தண்கடல் சேறாகாதே;
(6) அடினும்பால்பெய்துகைப் பறாதுபேய்ச்சுரைக்காய்;
(7) ஊட்டினும்பல்விரை யுள்ளிகமழாதே;
(8) ஒருநாட்பழகினும் பெரியோர்கேண்மை
இருநிலம்பிளக்க வேர்வீழ்க்குமே;
(9) நூறாண்டுபழகினு மூர்க்கர்கேண்மை
நீர்க்குட்பாசிபோல் வேர்க்கொள்ளாதே.

(ஆதலால்)

(10) பெருமையுஞ்சிறுமையுந் தாந்தரவருமே.

(பதவுரை முதலியன.)

(1) ஆவின்பால் - பசுவின்பாலை, அடினும்-வற்றக் காய்ச்சினாலும், தன் சுவை குன்றாது - தன்சுவையிற் குறையாது (மிகும்), அதுபோலவும்;—

(2) செம்பொன் - செம்பொன்னானது, சுடினும்-நெருப்பினாற் சுடப்பட்டாலும், தன் ஒளி கெடாது - தன்னொளியிற் குறையாது (மிகும்), அதுபோலவும்;—

(3) சந்தநம்-சந்தநக்கட்டையானது, அரைக்கினும்-அரைக்கப் பட்டாலும், தன்மணம் அறாது - தன் பரிமளம் குறையாது (மிகும்) அதுபோலவும்;—

(4) கார் அகில்-சேகுபற்றிய அகிற்கட்டையானது, புகைக்கினும்-நெருப்பிலிட்டுப் புகைத்தாலும், பொல்லாங்கு கமழாது-தன்மணமாறித் தீநாற்றம் நாறாது (நறுநாற்றமே மிகும்), அதுபோலவும்;-

(5) தண்கடல் - குளிர்ச்சியாகியகடலானது, கலக்கினும்-கலக்கப்பட்டாலும், சேறு ஆகாது-(கலங்கிச்)சேறாகமாட்டாது, (பின்னுந்

தெளிவாகவே யிருக்கும்) அதுபோலவும்;—மேன்மக்களை ஒருவர் பொல்லாங்குசெய்து கெடுப்பினும் தம் மேன்மைக்குணங் கெடாமலே, கெடுப்பவர்க்கு இன்பமானவற்றையே செய்வார்கள். இதற்குதாரணம்:—திருக்குறள்-சான்றாண்மை-எ-ம் பாட்டு,

"இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு."

இனி அருத்தாபத்தியால், நன்மை செய்தார்க்குத் தீமைகளே செய்வது கீழ்மக்களுக்கு இயல்பெனக்கொண்டு, வருந்தொடர்க்கும் இக்குறளையே யுதாரணமாகக் கொள்க.

(6) பேய்ச்சுரைக்காய்-பேய்ச்சுரைக்காயானது, பால்பெய்து அடினும் - பால்விட்டுச் சமைத்தாலும், கைப்பு அறாது - தன்குணமாகிய கசப்பு நீங்காது (அந்தப்பாலுங் கெட்டுப்போகும்), அதுபோலவும்;—

(7) பல்விரை ஊட்டினும்-பலவாசனைகளை யூட்டினாலும், உள்ளி-உள்ளியானது, கமழாது-தன் தீநாற்ற மொழிந்து நன்மணங் கமழாது,(அந்த பல நல்லவாசனைகளையுங் கெடுத்துவிடும்), அதுபோலவும், கீழ்மக்களைப் பல நன்மைகள் செய்து போற்றினும் அவற்றையெல்லாங் கெடுத்துத் தமது தூர்க்குணங்களையே காட்டுவர் என்பதாம். இதற்குதாரணம்:—

"தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா
வுளிநீரர் மாதோ கயவர்—அளிநீரார்க்
கென்னானுஞ் செய்யா ரெனைத்தானுஞ் செய்பவே
இன்னாங்கு செய்வார்ப் பெறின்."

"வேங்கை வரிப்புலியைத் தீர்த்த விடதாரி
யாங்கதனுக் காகார மானாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மே லிட்ட கலம்."

"தக்காருந் தக்கவ ரல்லாருந் தந்நீர்மை
யெக்காலுங் குன்ற லிலராவர்—அக்காரம்
யாவரே தின்னினுங் கையாதாங் கைக்குமாம்
தேவரே தின்னினும் வேம்பு."

இவற்றுள், கயவர் போற்றுவோர்க்கு நற்குணங் கொடாமைக்கும் தீக்குணங் கொடுத்தற்குமே உதாரணங் காண்க. இவ்விரண்டு தொடர்க்கும் பொருள் பெரியோர் - மூர்க்கர் எனவும், பெருமையுஞ் சிறுமையுந்தாந்தர வருமே எனவும் பின்னர்க் கூறுதலால் ஒட்டலங்காரமன்று, எடுத்துக்காட்டுவமையென்றேகொள்க. விளங்குதற்பொருட்டு இவ்விடத் தெடுத்துரைக்கப்பட்டன.

(8) ஒருநாள் பழகினும்-ஒருநாள் பழகினலும், பெரியோர் கேண்மை-மேன்மக்களுடைய நட்பாகிய மரமானது, இரு நிலம் பிளக்க-பெரிய பூமியானது பிளக்கும்படி, வேர் வீழ்க்குமே - வேரூன்றுநிற்கும்;—

வீழ்க்குமேயென மகரவொற்று விரித்தல் விகாரமாயிற்று. ஏகாரத்தை மாறிக்கூட்டுக. நட்பென்னு மரமானது நாளுக்குநாள் பூமியெல்லாம் பிளக்கும்படி வேர்வீழ்த்திக்கொண்டே தழைத்தோங்கும் என்பதாம். இதற்குதாரணம்:—திருக்குறள்-நட்பு-[illegible]ம் பாட்டு,

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு." எனவும்,

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை யெஞ்ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே—குருத்திற்
கெதிர்செலத் தின்றன்ன தகைத்தரோ வென்றுப
மதுர மிலாளர் தொடர்பு." எனவும் காண்க

(9) நூறுண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை-கீழ்மக்களுடைய நட்பாகிய மரமானது நூறுவருடம் பழகினலும், நீர்க்குள் பாசிபோல் - நீரிலுள்ள பாசிபோல, வேர் கொள்ளாதே - வேரூன்றாமலே அலையும்;—

பாசி நீர்க்குள் வேர்க்கொள்ளா தலைதல்போல வேர்க்கொள்ளா தலையுமெனக் கூட்டி விரித்துரைத்துக் கொள்க. ஏகாரம் - அசை நிலை. இதற்குதாரணம் மேற்காட்டியவற்றுட் காண்க. (அதனுல்),

(10) பெருமையும்-(மேன்மக்களிடத்துப்) பெருமையுண்டாதலும், சிறுமையும் - (கீழ்மக்களிடத்துச்) சிறுமை யுண்டாதலும், தாம் தர வருமே - அவர்தர வுண்டாவதேயன்றிப் பிறர்தர வுண்டாவதில்லை, எ-று.

மேன்மக்களுக்கு மேலானகுணமே யியற்கை, கீழ்மக்களுக்குக் கீழான குணமே யியற்கை. ஆதலால், இது ஒருவராலும் மாற்றப்படாதென்பது கருத்து. இதற்குதாரணம்;—திருக்குறள்-தெரிந்து தெளிதல்-ரு-ம் பாட்டு,

"பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்."

"தக்காருந் தக்கவ ரல்லாருந் தந்நீர்மை
யெக்காலுங் குன்ற லிலராவர்—அக்காரம்
யாவரே தின்னினுங் கையாதாங் கைக்குமாந்
தேம்பரே தின்னினும் வேம்பு."

ஆயின், மேன்மக்கள் கீழ்மக்களுக் குதாரணம் இரண்டிடத்துங் காட்டவேண்டிய தென்னெனின், அங்கே வகுத்துக்கூறி இங்கே தொகுத்துக் கூறியதனுல் இரண்டிடத்துங் காட்டவேண்டிற் றென்க.

அடினு மாவின்பா றன்சுவை குன்றாது என்பதுமுதல் பெருமையுஞ் சிறுமையுந் தாந்தர வருமே யென்னுமளவும் ஒருதொடர். இதனுள், அடினும் என்பதுமுதல் கலக்கினுந்தண்கடல் சேறுகாதே யென்னுமளவும் மேன்மக்களுக்கும், அடினும் பால்பெய்து என்பதுமுதல் உள்ளிகமழாதே யென்னுமளவும் கீழ்மக்களுக்கும் எடுத்துக்காட்டுவமை யெனவும், பின்பு ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்க வேர்வீழ்க் குமமே என்பது

மேன்மக்கள் நட்புக்கும், நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள் ளாதே என்பது கீழ்மக்கள் நட்புக்கும் உவமையெனக் கொண்டு, அதனால், எனக் காரணங்காட்டி, பெருமையுஞ் சிறுமையுந் தாந்தர வருமே எனத் தொகுத்து முடித்துக்கொள்க. (கஎ)

18. (1) சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம்
பெரியோராயிற் பொறுப்பதுகடனே;
(2) சிறியோர்பெரும்பிழை செய்தனராயிற்
பெரியோரப்பிழை பொறுத்தலுமரிதே.
(அதனால்)
(3) கற்கைநன்றே கற்கைநன்றே;
ஐயம்புகினும் கற்கைநன்றே.

(பதவுரை முதலியன.)

(1) சிறியோர் செய்த - கீழ்மக்கள் செய்த, சிறு பிழையெல்லாம் - சிறு குற்றங்களையெல்லாம், பெரியோராயின் - பெரியோராயிருக்கவேண்டின், பொறுப்பது கடனே - பொறுத்திருப்பதே நீதியாம்;—

ஆயின்என்பதை ஆயிருக்கவேண்டின் என விரித்துக்கொள்க.

இதற்குதாரணம்:—திருக்குறள்-பொறையுடைமை-௪-ம் பாட்டு,

"நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்."

(2) சிறியோர் பெரும்பிழை செய்தனராயின்-சிற்றறிவுடையோர்பெரிதாகிய குற்றத்தைத் செய்தாரானால், பெரியோர்-பெரியவர், அப்பிழை-அந்தக் குற்றத்தை, பொறுத்தலும் அரிதே - பொறுத்திருப்பதும் அரிதேயாம்;—

அவ்வாறு பொறுப்பவராயினும் இதற்குக் கோவங்கொள்வர், கொண்டால் காப்பது அரிதென்பது கருத்து. இதற்குதாரணம்:—திருக்குறள்-நீத்தார் பெருமை-௯-ம் பாட்டு,

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது."

(அதனால்)

இப்பெருமை சிறுமைகளை யெல்லாம்ஒருவன் அறிந்தொழுகு தற்பொருட்டு, கற்கை நன்றே கற்கை நன்றே - எல்லா நூல்களை யும் இளமையிற் றொடங்கிக் கற்பதே நன்மை, கற்பதேநன்மை;

(4) ஐயம் புகினும் கற்கை நன்றே-பிச்சை யேற்கவர்த காலத் தும் கற்பதே நன்மை. எ-று.

இதனுள், சிறியோர்செய்த சிறுபிழை யெல்லாம் என்பது முதல் ஐயம்புகினுங் கற்கைநன்றே என்னுமளவும் ஒருதொடர். கடன் - அரிது, அதனால், கற்கைநன்றே யென முடித்து, அப்பெரு மை சிறுமைகளை யறிந்தொழுகுதற்பொருட்டு, எவ்வளவு கற்பினும் அவ்வளவுக்கவ்வளவு அறிவு சுரக்குமாதலால் அதுபற்றி, அடுக்கி யும் தேற்றேகாரம் கொடுத்து வலியுறுத்தியும் அமையாது, மீட்டும் அதுபோலத் துன்பநோ யொழித்தற்சேற்ற மருந்து பிறிதில்லை யா தலால், ஐயம்புகினுங்கற்கைநன்றே யெனக்கூறினரெனப் பொருள் கொள்க. இதற்குதாரணம்;—திருக்குறள்-கல்வி-கூ-ம் பாட்டு,

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."

எனக் கற்றவளவாக அறிவு சுரத்தற்கும்,

"இம்மை பயக்குமா லீயக் குறைவின்றால்
தம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோல்
மம்ம ரறுக்கு மருந்து."

எனத் துன்பநோ யொழித்தற்கு அதைவிட மருந்தில்லை யென் றற்கும் உதாரணங் காண்க. (கூ)

19. (1) கல்லாவொருவன் குலநலம்பேசின்
நெல்லினுட்பிறந்த பதராகும்மே;

(2) நாற்பாற்குலத்தின் மேற்பாலொருவன்
கற்றிலனாயிற் கீழிருப்பவனே;

(3) எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடிக்கற்றோரை மேல்வருகென்பர்;

(4) அறிவுடையொருவனை யரசனும்விரும்பும்.

(5) (அதனால்)

(6) அச்சமுள்ளடங்கி யறிவகத்தில்லாக்
கொச்சைமக்களைப் பெறுதலினக்குடி
எச்சமற்றேமாந் திருக்கைநன்றே.

(பதவுரை முதலியன.)

(1) கல்லா ஒருவன் குலநலம் பேசின்-கல்லாத வொருவனையும் அவன் குலத்திற் கற்றவருடைய மேன்மையையும் எடுத்துப் பேசுங்கால், நெல்லினுள் பிறந்த பதர் ஆகுமே-நெற்பயிருட் பிறந்த பதரும் நெல்லுமாய் முடியும்;—

இவனைப் பதரெனவே அக்குலத்திற் பிறந்து கற்றவர் நெல்லென்பது தானே யமைதலால் மிகைபடக் கூறுதொழிந்தார். குலம் - ஆகுபெயர். பதர் வடிவிலே நெல்லைப்போலிருந்து பயன் படாததுபோலப் பயன்படார் கல்லாதவரென்பது கருத்து. இதற்கு உதாரணம்:—திருக்குறள்-கல்லாமை-கூ-ம் பாட்டு,

"உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்."

(2) நாற்பாற்குலத்தின் மேற்பாலொருவன்-அந்தணன் அரசன் வணிகன் சூத்திரன் என்னும் நான்கு வருணத்தின் முன்னின்ற வருணத்திற் பிறந்த வொருவன், கற்றிலன் ஆயின் - கல்லாதவனானால்

னல், கீழ் இருப்பவனே - (அவன்) தாழ்ந்த இடத்தில் இருக்கத்தக்கவனே;—

(3) எக்குடி பிறப்பினும்-கடைநின்ற எந்தக் குலத்திலே பிறந்திருந்தாலும், யாவரே ஆயினும்-(அழைப்பவர் தேவர் முனிவர் அரசர் என்பவருள்) யாராயிருந்தாலும், அக்குடி கற்றோரை - அக்குலத்திற் கற்றவராயினாரை, மேல் வருக என்பர்-மேலிடத்து வந்திருக்கவென்றுபசரித்தழைப்பர்;—

யாவரேயாயினும் என்றது அழைப்பவரைக் குறித்துநின்றது. யாவரேயாயினும் என்றதனால் பெருமைபொருந்திய தேவர் முதலியோருள் என்பது பெறப்பட்டது. வருகவென்பர் என்பது வருகென்பர் என விகாரமாயிற்று. கருத்து விளங்கிக் கிடந்தது. இதற்குதாரணம்:—திருக்குறள்-கல்லாமை-கூ-ம் பாட்டு,

"மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு."

திருக்குறள்-கல்வி-ரு-ம் பாட்டு,

"உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்."

(4) அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்-இன்னும் கல்வியறிவுடையோனை அரசனுங்கூட விரும்புவான்;—

அரசனும் எனச் சிறப்பும்மை இறந்தது தழுவியும் நின்றது. பெற்றவர் கற்றவர் யாவரும் மற்றக்குடிகளும் விரும்புவதன்றி யெனப் பொருள்தருதலால் எனக்காண்க. இதற்குதாரணம்:—திருக்குறள்-புதல்வரைப்பெறுதல்-அ-ம் பாட்டு,

"தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது."

(5) அதனால் - கற்றதனால் இவ்வாறு மேன்மையும் கல்லாமையால் இவ்வாறு கீழ்மையும் பெறவருதலால்.

(6) அச்சம் உள் அடக்கி - பயமொன்றே யதனுள் நிறைத்து, அறிவு அகத்து இல்லா - மனத்தின்கண் அறிவொதுங்கிய, கொச்சை மக்களை - ஆடுகளை நிகர்த்த பிள்ளைகளை, பெறுதலின் - பெற்று வருந்துதலினும், அக்குடி - (அந்தப் பிள்ளைகளைப்பெற்ற) அக்குலத்துள்ளவர், எச்சம் அற்று - சந்ததியற்று (வந்திகளாய்), ஏமாந்திருக்கை நன்றே-இன்புற்றிருத்தலே நன்மையாம், எ-று.

அப்பிள்ளைகளைப் பெற்றுத் தாமும் அவரும் துன்புறுதலொழிதலால், 'எச்சமற்றேமாந்திருக்கைநன்று' என்றார். கொச்சை - வெள்ளாடு. கல்லாவொருவன் குலநலம்பேசின் என்பதுமுதல் எச்சமற்றேமாந்திருக்கைநன்றே என்னுமளவும் ஒருதொடர் எனக்கொண்டு, கற்றதனால் இவ்வாறு பெருமையும் கல்லாமையால் சிறுமையும் வரும், அதனால், கல்வியறிவில்லாப் பிள்ளைகளைப் பெற்று வருந்துதலினும், பெறாது இன்புற்றிருத்தலே நன்று எனப்பொருள்காண்க. (கக)

20. (1) யானைக்கில்லை தானமுந்தருமமும்

(2) பூனைக்கில்லை தவமுந்தயையும்

(3) ஞானிக்கில்லை யின்பமுந்துன்பமும்.

(பதவுரை முதலியன.)

(1) தானமும் தருமமும் - (கை' கொடைக்கு நீண்டதுபோலிருப்பினும்) கொடையும் மற்றைத் தருமங்களைச் செய்தலும், யானைக்கு இல்லை-யானைக்கியல்பாகவே யில்லை அதுபோலவும்,

(2) தவமும் தயையும்-(தவஞ்செய்வதுபோலக்கண்களை மூடிக்கொண்டும் அருளுடையதுபோல மிகவும் சாந்தகுணத்தோடு கூடியுமிருந்தாலும்) அவ்விரண்டும், பூனைக்கு இல்லை - பூனைக்கு இயல்பாகவேயில்லை, அதுபோலவும்,

(3) இன்பமும் துன்பமும் - (உலகத்தாரோடு கூடி இன்புற்றிருப்பவன்போலவும் துன்புற்றிருப்பவன்போலவும் தோன்றினும்) அவ்விரண்டும், ஞானிக்கு இல்லை-ஞானிக்கு இயல்பாகவே யில்லை,

இதன் கருத்து விளங்கிக் கிடந்தது. இதற்குதாரணம்:—

திருக்குறள் - கடவுள்வாழ்த்து - ரு - ம் பாட்டு,

"இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."

இருவினையின் பயன் இன்பதுன்பங்களாதலாற் காண்க. (உ0)

21. (1) சிதலைக்கில்லை செல்வமுஞ்செருக்கும்;
(2) முதலைக்கில்லை நீத்துநிலையும்;
(3) அச்சமுநாணமு மறிவிலோர்க்கில்லை;
(4) நாளுங்கிழமையு நலிந்தோர்க்கில்லை;
(5) கேளுங்கிளையுங் கெட்டோர்க்கில்லை.

(பதவுரை முதலியன.)

(1) செல்வமும் - இது செல்வமென்பதும் (இது பிறர்க்குப் பயன்படு செல்வமுடையவ ராடையென்றெண்ணுமெண்ணமும்), செருக்கும்-இது செருக்கென்பதும், (இது பிறர்க்குதவாது தாமே யுண்டுடுத்துக் களித்திருப்பவராடை. யென்றெண்ணு மெண்ணமும்), சிதலைக்கு இல்லை-செல்லுக்கு இயல்பாகவேயில்லை, (நேர்ந்தால் இரண்டையுந் தின்றுவிடுவதேயன்றித்தின்ன திருப்பதில்லை; அதுபோலவும்;—

(2) நீத்தும்-இது நீந்தத்தகுந்த நீர், (இதிலே செல்லலாகாதென்றெண்ணு மெண்ணமும்), நிலையும் - இது நிலைகொள்ளத்தக்க தென்பதும், (இது நிலைகொள்ளத்தகுந்தநீர், இதிலே செல்லலாமென்றெண்ணுமெண்ணமும்), முதலைக்கு இல்லை - முதலைக்கு இயல்பாகவே யில்லை. (நேர்ந்தால் இரண்டிலுஞ் செல்வதேயன்றிச் செல்லா திருப்பதில்லை), அதுபோலவும்;

(3) அச்சமும் நாணும்-இது அஞ்சத்தக்கது,இது நாணத்தக்கது என்பதும், தக்கதிதுவென்றொதுங்குதலும்,தகாததிதுவென்றுஅதைச்செய்ய வுடன்படுதலும், அறிவு இல்லோர்க்கு-பேதையர்க்கும்:—

(4) நாளும் கிழமையும்-இந்தநாள் இந்தக்கிழமை தக்கதென்று ஒன்றைச்செய்ய வுடன்படுதலும், தகாதென்று விலக்கலும், நலிந்தோர்க்கு - வறுமையால் நொந்தவர்க்கும்;—

(5) கேளுங்கிளையும்-இவர் சிநேகிக்கத்தக்கவரென்பதும்,இவர் விரும்பத்தக்க சுற்றத்தாரென்பதும் (தக்கவரென்று தழுவலும், தகாதவரென்று விலகலும்), கெட்டோர்க்கு - தமது குலநிலையிலே தவறிக் கெட்டுப்போனவர்க்கும், இல்லை - (நேர்ந்தால் இரண்டு மொன்றுவதேயன்றி) இயல்பாகவேயில்லை, எ-று.

வறுமையிலென்பது சொல்லெச்சம். நலிந்தோர் என்பது செயப்பாட்டு வினையாலணைந்தபெயர். செல்வம் செருக்கு என்பன ஆகுபெயர்கள். தின்பதன்றி யெண்ணுவதென்பது குறிப்பெச்சம். வினையவற்றையும் ஏற்குமா றய்த்துணர்ந்துகொள்க. இவற்றிற்குதாரணம்:

திருக்குறள் - அறிவுடைமை - அ - ம் பாட்டு,

"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்."

திருக்குறள் - நாணுடைமை - கo - ம் பாட்டு,

"நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று."

திருக்குறள் - நல்குரவு - ௬ - ம் பாட்டு,

"தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு நசை."

இக்குறளினுள் தொல்வரவென்பது நாளுங் கிழமையும் பார்த்தன் முதலியவாதலால் உதாரணங்காண்க.

"நீரினு நுண்ணிது நெய்யென்பர் நெய்யினும்
யாரு மறிவர் புகைநுட்பம்—தேரின்
நிரப்பிடும் பையா ளன்புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து."

இதில், புகையும் நுழைதற்கரிய துவாரத்திலே நுழைந்துபோவான் என்றதனால் செல்வரைத் தடுத்த நாட்கிழமைகளிலும் நுழைந்துபோவான் என வுதாரணங் காண்க.

திருக்குறள் - மானம் - ௫ - ம் பாட்டு,

"தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை." என்றும்,

திருக்குறள் - நெஞ்சொடு புலத்தல் ௫ - ம் பாட்டு,

"கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்." என்றும்,

முறையே காண்க. சிதலைக் கென்பதுமுதல் கேளுங்கிளையும் என்பதனளவு மொருதொடரெனக்கொண்டு அசனுன், சிதலைக் கில்லை யென்பன விரண்டும் எடுத்துக்காட்டுவமை யெனவும், அச்சமுநாணு மறிவிலோர்க்கில்லை, நாளுங்கிழமையு நலிந்தோர்க்கில்லை, கேளுங்கிளையுங் கெட்டோர்க்கில்லைஎன்பன மூன்றும் பொருளெனவுங் கொண்டு, அவற்றிற்கியையும்படிபொருள் விரித்துரைத்து முடித்துக்கொள்க. செய்யுளின்ப நோக்கித் தனித்தனி முடிபாக்கிக் கூறினரேனும், சிதலைக்குச் செல்வமுஞ் செருக்கும் முதலைக்கு நீத்து நிலையுமில்லை, அதுபோல, அறிவிலோர்க் கச்சமு நாணும் நலிந்தோர்க்கு நாளுங்கிழமையும் கெட்டோர்க்குக் கேளுங் கிளையும் இல்லையென ஒருவினைமுடிவாக்குக. (௨௧)

22. (1) உடைமையும்வறுமையு மொருவழிநில்லா;

(2) குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந் தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினுநண் ணுவர்;

(3) சிறப்புஞ்செல்வமும் பெருமையுமுடையோர்
அறக்கூழ்ச்சாலை யடையினுமடைவர்;

(4) அறத்திடுபிச்சை கூவியிரப்போர்
அரசோடிருந்தர சாளினுமாளுவர்;

(5) குன்றத்தனையிரு நிதியைப்படைத்தோர்
அன்றைப்பகலே யழியினுமழிவர்;
(6) எழுநிலைமாடங் கால்சாய்ந்துக்குக்
கழுதை மேய்பா ழாகினு மாகும்;
(7) மணவணியணிந்த மகளிராங்கே
பிணவணியணிந்துதங் கொழுநரைத்தழீஇ
உடுத்தவாடை கோடியாக
முடித்தகூந்தல் விரிப்பினும்விரிப்பர்;
(8) பெற்றமுங்கழுதையு மேய்ந்தவப்பாழ்
பொற்றொடிமகளிரு மைந்தருஞ்செறிந்து
நெற்பொலி நெடுநகராயினுமாகும்;
(9) இல்லோரிரப்பது மியல்பேயியல்பே;
(10) இரந்தோர்க்கீவது முடையோர்கடனே.

(பதவுரை முதலியன.)

(1) உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லாது - செல்வமும் தரித்திரமும் ஆகிய இரண்டும் அதுநின்றவிடத்ததுவேயாகவும் இதுநின்றவிடத் திதுவேயாகவும் நில்லாது மாறியும் நிற்கும்;—

மாறியுநிற்கு மென்பது குறிப்பெச்சம். இதை யேதுவாக்கி இனி வருவனவற்றோடு ஒட்டுக. இதற்குதாரணம்:—

திருக்குறள் - நிலையாமை - உ - ம் பாட்டு,

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று."

"துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்."

(2) வெண்கொற்றக் குடைநிழலின்கீழிருந்தபடி யானையின் கழுத்திலிருந்து அதைச்செலுத்திப் பவனிவந்த அரசரும் எல்லாவற்றையுமிழந்துநடப்பதற்குச் சத்தியில்லாமல், உடம்பு மெலிந்து மற்றொரு தேசத்திலே சீவநத்தின்பொருட்டுச் சென்று சேரினுஞ் சேருவர்;—

சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. உதாரணம் மேற்காட்டிய குறளும்,

"யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்—ஏனை
வினையுப்ப வேறாகி வீழ்வர் தாங்கொண்ட
மனையாளை மாற்றார் கொள." என்பதுங் காண்க.

விசேடித்த வுயர்வும் செருக்கிய செல்வமும் மானமும் உடையவர் அவையாவு மிழந்து நித்திய தரித்திரராகி வயிற்றுப்பசியினால், கூழின்பொருட்டு அவற்றை யிழந்தவ்வூரிலே யிருக்கிற அன்னசத்திரங்களைப் போய்ச் சேரினுஞ் சேர்வர்; இதற்குதாரணம்:—

திருக்குறள் - நல்குரவு - ௫ - ம் பாட்டு,

"நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்."

"அறுசுவை யுண்டி யமர்ந்தில் லாளூட்ட
மறுசிகை நீக்கி யுண்டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்திற் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று."

(4) தருமத்தைக்குறித் திடப்படும் பிச்சை யுண்டோவென்று வீதிகளிலே நின்று கூப்பிட்டிரந்துதிரிபவர் அரசியலோடு கூடியிருந்து உலகத்தை யாளினும் ஆளுவர்;—

அரசியலோடு கூடியிருத்தல்-படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு அரண் என்னு மாறங்கத்தோடுங் கூடியிருத்தல்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - ஊழ் - ௫ - ம் பாட்டு,

"நல்லவை யெல்லா அந் தீயவாந் தீயவும்
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு."

"வளம்படவேண்டாதார்—இல் - எ-ம்" காண்க.

(5) மலையளவாக வுயர்ந்த சங்கநிதி பதுமநிதிகளைப் படைத்தவர், படைத்த வன்றைத்தினத்திலேதானே அவற்றை அநுபவியாமல் இறப்பினு மிறப்பர்;—

இதற்குதாரணம்:—திருக்குறள் - நிலையாமை - ௲ - ம் பாட்டு,

"நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு."

நாலடியார் - யாக்கைநிலையாமை-௩-ம் பாட்டு,

"மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர்—நிலமிசைத்
துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட்டா ரல்லால்
எஞ்சினா ரிவ்வுலகத் தில்."

(6) செல்வர்களுடைய எழுநிலைகளையுடைய மாடங்களானவை அடியோடே சாய்ந்து கொறுங்கிப்போகக் கழுதைகளும் மேயத்தகுந்த பாழ்நிலங்க ளாயினுமாகும்;—

உக் என்பது உக்கு எனத் திரிந்துநின்றது. இறந்தது தழீஇய எச்சவும்மை குறைந்துநின்றது. அதனால் ஆடுமாடுகள் மேய்வதுமன்றி யெனப் பொருள்படுதல் காண்க. இதற்குதாரணம்:—

மேற்காட்டிய குறளினும்,

நாலடியார் - இன்மை - ௯-ம் பாட்டு,

"கடகஞ் செறிந்ததங் கைகளால் வாங்கி
யடகு பறித்துக்கொண் டட்டுக் - குடைகலனா
வுப்பிலி வெந்ததின் றுள்ளற்று வாழ்பவே
துப்புரவு சென்றுலந்தக் கால்."

என்ற இதனுள்ளும் எழுநிலைமாடங் கால்சாய்ந்துக்குக் கழுதை மேய் பாழாக இவ ரிவ்வாழுமினு ரெனக்காண்க. அதற்குக் கடகஞ் செறிந்த கையே சான்றாதலால்.

(7) மணக்கோலத்தோடு மணவேதிகையில் வீற்றிருந்த மாதர்கள் அந்த மணப்பந்தலிலேதானே (கணவரிறந்ததனால்) பிணக்கோலம் பூண்டு, மாலையிட்ட தங்கணவரைக் கட்டியணைத்துக்கொண்டு, முன்னுடுத்த மணக்கூறையே அறுப்புக்கூறையாகவும், முன்பு மகிழ்ந்து முடித்த கூந்தலை விரித்துப் புலம்பினும் புலம்புவர்;—

விரித்தல் புலம்புதற்காதலால் வருவித் துரைக்கப்பட்டது.

இதற்குதாரணம்:—திருக்குறள் - நிலையாமை - எ - ம் பாட்டு,

"ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல."

இக்குறளினுள், அன்றைத்தினம் வருவ துணராது கலியாணஞ் செய்ய நினைந்து செய்தலால் உதாரணங் காண்க.

"மன்றங் கறங்கு மணப்பறை யாயின
வன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப் - பின்றை
ஒலித்தலு முண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமா மாண்டார் மனம்."

எனவும் காண்க.

(8) மாடுகளும் கழுதைகளும் மேய்ந்த மேற்கூறிய பாழ்நிலம் போன்றதும், பொன்வளையை யணிந்த மங்கையரும் புருடருமாக நெருங்கி, நெற்பொலிகளையுடைய பெரும்பதி யாயினுமாகும்;—

பொலி - அம்பாரம். செறிய என்பது செறிந்து எனத் திரிந்து நின்றது. காடு நாடாயினுமாம் என்பது கருத்து. உதாரணம் வந்தவழிக் காண்க.

அதனால் - அக்காரணத்தால்,

(9) தரித்திரர் யாசகஞ் செய்வதும் அவர்க்கு இயற்கையேயாம்;—

வலியுறுத்தற்பொருட்டு அடுக்கித் தேற்றேகாரமும் கொடுத்து இயல்பே 'பியல்பே' எனக் கூறினர்.

"இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை."

என்றாற்போல இங்கே செயற்கை இயற்கை யெனப்பட்டது.
இயல்பு - இயற்கை.

இதற்குதாரணம்:—திருக்குறள் - இரவு - க - கூ - ம் பாட்டுகள்,

"இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பின்
அவர்பழி தம்பழி யன்று."

"ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோள்
மேவா ரிலாஅக் கடை."

(10) அவ்வாறு யாசித்தார்க்கு இல்லையென்னுது கொடுப்பதும் செல்வர்க்குக் கடன்மையேயாம்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - ஒப்புரவறிதல் - எ - ம் பாட்டு,

"மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்."

உடைமையும் வறுமையு மொருவழி நில்லா வென்பதுமுதல் இரந்தோர்க்கீவது முடையோர் கடனே என்னுமளவு மொருதொடர். இதனுள் உடைமையும் வறுமையுமொருவழி நில்லாவாதலால் குடை - நண்ணினுநண்ணுவர், அடைகினுமடைகுவர், ஆளினுமாளுவர், அழியினுமழிகுவர், ஆகினுமாகும், விரிப்பினும்விரிப்பர், ஆயினுமாகும், அதனுல், இரப்பதியல்பு, ஈவதுகடன் என முடித்துப் பொருள்காண்க. உம்மைகளெல்லாம் ஐயத்தின்கண் வந்தன. பிற இலக்கணங்களு முய்த்துணர்ந்துகொள்க. (உஉ)

23. நல்லஞாலமும் வானமும்பெறினும்
எல்லாமில்லை யில்லில்லோர்க்கே.

(பொழிப்புரை.) நல்ல பூமியின் செல்வமுழுதும் வானுலகின் செல்வமுழுதும் பெற்றாராயினும், நற்குண நற்செய்கைகளையுடைய மனைவியைப்பெற்றிலாதவர்க்கு அவைமுழுதுமில்லை, எ-று.

(வி-ரை.) பயன் படாமையின் 'இல்லை' என்றார். நற்குண நற்செய்கைகளை யுடையவளே இல்லாளாதலால் இல் என அடைகொடாதே கூறினார். "இல்லாளகத்திருக்க வில்லாததொன்றில்லை" என இவ்வாறே அடைகொடாமல் ஔவையார் கூறுதலுங் காண்க. இதன்கருத்து விளங்கிக் கிடந்தது.

இதற்குதாரணம்:— திருக்குறள்-வாழ்க்கைத்துணைநலம்-உ-ம் பாட்டு,

"மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்." (உ௩)

24. தறுகண்யானை தான்பெரி தாயினும்
சிறுகண்மூங்கிற் கோற்கஞ்சும்மே.

(ப-ரை.) தறுகண்-கொலைசெய்தற்கஞ்சாத வீரத்தன்மை பெரிதாயினும், தான் பெரிது ஆயினும் - அதுவும் உருவத்தாற் பெரிதாயிருப்பினும், சிறுகண் மூங்கில் கோற்கு-(ஒருவன்பாதுகாவலுக் குட்பட்டபோது அவன் கையிலிருந்த) கணுக்களையுடைய சிறிய மூங்கிற்கோலுக்கும், யானை அஞ்சும்மே - யானை அஞ்சுவது நிச்சயம், எ-று.

(வி-ரை.) சிறுகண் என்னும் இரண்டுவிசேடணமும் கோல் என்னும் முதற்பொருட்கு வந்தது. ஏகாரம் தேற்றம். தறுகண் பெரிதாயினும் தான் பெரிதாயினும் சிறுகண் மூங்கிற் கோற்கு யானையஞ்சும்மே யெனக் கூட்டுக. கோற்கஞ்சும் என்றதனால், ஒருவன் பாதுகாவலுக் குட்பட்டபோது அவன் கையிலிருந்த என்பது பெற்றாம். ஒருவன் சுத்தவீரனாயிருந்தாலும் அரசனுடைய பாதுகாவலுக் குட்பட்டபோது அவனுக்கு அஞ்சி நடப்பது மல்லாமல், அவனடையாளம் பெற்று வந்தவர்க்கும் அஞ்சி நடக்கவேண்டு மெனப் பிறிது பொருள் தருதலால் இது ஒட்டலங்காரமெனக் காண்க. நடவாக்கால் அவன் பாதுகாப்பை யிழந்து துன்புறுதல் நிச்சயமாதலால் கருத்து விளங்கிற்று. இதற்குதாரணம்:—

திருக்குறள் - மன்னரைச் சேர்ந்தொழுகல் - அ - ம் பாட்டு,

"இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும்."

இதனுள், இளைய ரினமுறைய ரென்று தொழுகப்படுத லெனக்கொண்டு அரசனுக்கஞ்சி நடத்தற்கும், நின்ற வொளியோடொழுகப்படுத லெனக்கொண்டு அவனடையாளத்திற்கஞ்சிநடத்தற்கும் உதாரணங் காண்க. (உச)

25. (1) குன்றுடைநெடுங்கா டேவாழினும்
புன்றலைப்புல்வாய் புலிக்கஞ்சும்மே;
(2) ஆரையாம்பள்ளத் தூடேவாழினும்
தேரைபாம்பிற்கு மிகவஞ்சும்மே;
(3) கொடுங்கோன்மன்னர் வாழுநாட்டில்
கடும்புலிவாழுங் காடுநன்றே.

(பதவுரை முதலியன.)

(1) குன்று உடை - மலைகளைத் தன்னிடத்தேயுடைய, நெடு காடு ஊடே - நெடிய காட்டின்கண், வாழினும் - அதுவும் இதுவும் ஒத்து வாழ்ந்தபோதினும், புல் தலை - சிறிய தலையையுடைய, புல்வாய் - புல்வாயானது, (வாய்வலியையும் வன்றலையையுமுடைய), புலிக்கு அஞ்சும்மே - புலிக்கஞ்சியே வாழாநிற்கும்;—

புல்வாய் - அன்மொழித் தொகை; புன்மையாகிய வாயினையுடையது. புன்றலைப் புல்வாய் என்றதனல், புலி வன்றலையையும் வல்வாயையு முடையதென்பது பெற்ரும்.

(2) ஆரை ஆம்பள்ளத்தூடே வாழினும் - ஆரையோடு கூடிய நீரோடையில் அதுவு மிதுவு மொத்து வாழ்ந்தபோதினும், தேரை - தவளையானது, பாம்பிற்கு - நீர்ப்பாம்புக்கு, மிக அஞ்சும்மே - மிகவும் அஞ்சியே வாழாநிற்கும்;—

ஆரை - நீரிற்படர்வதோர் பூண்டு. ஆம் - நீர். இவை யஞ்சி வாழ்வதற்கேது வென்னெனின், சிறிய தவறுளவாயிற் கொன்று தின்னுமென்பது கருதியாதலால்.

(3) கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில்-கொடுங்கோ லரசரோ டொத்துவாழ்கின்ற நாட்டினும், கடும் புலி வாழும் காடு நன்றே - (ஒருவனுக்குக்) கடுமையையுடைய புலி வாழ்கின்ற காடு குடியிருத்தற்கு மிகவும் நன்றாம், எ-று.

அதனோடுகூடி வாழாமல் அதற்கஞ்சியே அது சஞ்சரியாத இடத்திற் குடியிருக்கலா மாதலால் 'நன்று' என்றார். கொடுங்கோல் - வளைந்தகோல். இது அரசநீதி கோணுதற்கு உவமையாகுபெயராய் நின்றது. கொலைசெய்யும் புலியினும் கொடுங்கோல் மன்னர் கொடியர் என்பதாம்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - கொடுங்கோன்மை - க-ம் பாட்டு,

"கொலைமேற் கொண்டாரிற் கொடிதே யலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து."

எனக் கூறுதலுங்காண்க. இதனுள், புல்வாயும் புலியும், தேரையும் பாம்பும் ஒத்து வாழ்தல்போல, ஒருவன் கொடுங்கோன் மன்னரோடொத்துவாழ்தலெனவும், வாழினும், புல்வாயும் தேரையும் புலிக்கும் பாம்பிற்கும் அஞ்சியே வாழ்தல் போல, அவன் கொடுங்கோன் மன்னர்க் கஞ்சியே வாழவேண்டும், ஆதலால், அதைவிட அவனுக்குக் கடும்புலிவாழுங் காடே நன்று என முடித்துப் பொருளுணர்ந்துகொள்க. (௨௫)

26. சான்றோரில்லாத் தொல்பதியிருத்தலிற்
றேன்றேர்குரவர் தேயநன்றே.

(ப-ரை.) சான்றோர் இல்லா - (கல்வியறி வொழுக்கங்கள்) நிறைந்த பெரியோரில்லாத, தொல் பதி இருத்தலின் - பழமையான நகரத்தில் ஒருவன் குடியிருப்பதினும், தேன் தேர் குரவர் தேயம் நன்றே - உணவின்பொருட்டாகத் தேனையாராய்ந்துதிரிகின்ற குறவர் குடியிருக்கும் நாடே அவன் குடியிருத்தற்கு நன்று, எ-று.

(வி-ரை.) ஏகாரம் - தேற்றப்பொருளது. அக்குறவர் நாட்டினும் இதுபாவமிகுதியாற் கேடு பூண்டிருப்ப தாதலால், சான்றோரில்லாத நாடு நாடன்றென்பதும், அச்சான்றோர் சார்பு பெற்றவன் பகைவராலும் தீக்குசெய்யப்படான் என்பதுங் கருதி இவ்வாறு கூறினாரெனக்காண்க.

இதற்குதாரணம்:—திருக்குறள் - நாடு - க - ம் பாட்டு,

"தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு." எனவும்,

திருக்குறள் - பெரியாரைத்துணைக்கோடல் - கூ - ம் பாட்டு,

"தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்." எனவும்

முறையே காண்க. (உசு)

27. வித்துமேரு முளவாயிருப்ப
எய்த்தங்கிருக்கு மேழையும்பதரே.

(ப-ரை.) வித்தும் - விதைத்தற்கு வித்தும், ஏரும் - உழுதற்கு ஏர்முதலியவும், உளவாயிருப்ப - அமைந்திருக்க, எய்த்து அங்கு இருக்கும் - (உழுது பயிர்செய்து வாழமாட்டாமல் சோம்பலாலே) வறுமையுற் றிளைத்திருக்கும், ஏழையும் - பேதையும், பதரே - ஒரு மக்கட்பதரே யாவன், எ-று.

(வி-ரை.) தன் சரீரத்தை யொளிக்காமலே வருத்தப்பட்டு அந்தக் கைத்தொழிலைச் செய்வானாயின், தானு மிரவாது பிறர்க்கீந்தும் வாழ்தலாயிருக்க, அதனைச் செய்யாமலே சோம்பி வருந்துவோனைக் கண்டால் பூமிதேவியும் நகைப்பா ளாதலால் 'பதர்' என்றார்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - உழவு - ரு - சo - ம் பாட்டுகள்,

"இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்." எனவும்,

"இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னு நல்லா ணகும்." எனவும்

அவ்விருதிறத்திற்கும் உதாரணங் காண்க. (உஎ)

28. காலையுமாலையு நான்மறையோதா
அந்தணரென்போ ரனைவரும்பதரே.

(ப-ரை.) காலையும் - காலைப்பொழுதினும், மாலையும் - மாலைப் பொழுதினும், நான்மறை ஓதா - நான்கு வேதங்களையும் ஓதாத, அந்தணர் என்போர் அனைவரும் - பார்ப்பாரென்போ ரெல்லாரும், பதரே - பார்ப்பனப் பதரேயாவர், எ-று.

(வி-ரை.) நான்மறை யோதி அதன் பொறையை யுட்கொளா மையிற் 'பதர்' என்றார்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - ஒழுக்கமுடைமை - ௪ - ம் பாட்டு,

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்."

எனத் திருவள்ளுவநாயனாரும் மறக்கலாகா தென்னுங் கருத்தையுட்கொண்டு 'ஓதிக்கொளலாகும்' எனக் கூறினர். கொள்ளா விடின் பிறப்புக் கெடுமென்பதே அவர்க்குங் கருத்து. ஆதலால் இவர் 'பதர்' என்றார். (உஅ)

29. குடியலைத்திரந்து கோலொடுநின்ற
முடியுடையிறைவ னூர்க்கனும்பதரே.

(ப-ரை.) குடி அலைத்து - குடிகளை வருத்தி, இரந்து - (தன் பகுதியின் மேற்படப் பொருள் தொடுக்கும்படி அவர்களை யடித்துப் பறிப்பவன்போல) யாசகஞ் செய்து, கோலொடு நின்ற - கொடுங் கோலொடு கூடிநின்ற, முடி உடை - முடியையுடைய, இறைவன் ஆம் மூர்க்கனும் - வேந்தனாகிய மூர்க்கனும், பதரே - அரசப்பதரே யாவன், எ-று.

(வி-ரை.) விரைந்துகெடுத லுணராது நெடுங்காலம் வாழலா மென்றெண்ணி அவ்வாறு செய்தலால் 'பதர்' என்றார்.

இதற்குதாரணம்:—திருக்குறள்-கொடுங்கோன்மை - ௨ - ம் பாட்டு,

"வேலொடு நின்றா னிடுவென் றதுபோலும்
கோலொடு நின்றா னிரவு." எனவும்

திருக்குறள் - வெருவந்தசெய்யாமை - ௯ - ம் பாட்டு,

"வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்த மொல்லைக் கெடும்." எனவும்

முறையே குடியலைத் திரத்தற்கும் அவன் விரைந்து கெடுவா னென்பதற்கு முதாரணங் காண்க. (உக)

30. முதலுளவாகக் கொண்டுவாணிபஞ்செய்
தத்தன்பயனுகரா வணிகராய்பதரே.

(ப-ரை.) முதல் உளவாக - முதலாகப் பொருளிருக்கவும், கொண்டு - (அதனாலே கொள்ளும் பண்டங்களைக்) கொண்டு விற்று, வாணிபம்செய்து - வர்த்தகஞ் செய்து, அதன் பயன் - அதனால் வருகிற ஆதாயப்பயனை, நுகரா - அநுபவியாத, வணிகர் - தனவைசியர், ஆய் பதர் - (வைசியர்க்குள்ளே) தெரிந்தெடுக்கப்படும் பதர்களாவர், எ-று.

திருக்குறள் - பெரியாரைத்துணைக்கோடல் - ௯ - ம் பாட்டு,

"முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை."

என்றாராகலின், இவர் முதலிருந்தும் ஊதியத்தை யிழத்தலால் 'பதர்' என்றார். (௩0)

31. தன்மனையாளைத் தாய்மனைக்கனுப்பிப்
பின்பவட்பேணுப் பேதையும்பதரே.

(ப-ரை.) தன் மனையாளை - தன் மனையாட்டியை, தாய் மனைக்கு அனுப்பி - அவளுடைய தாய்வீட்டிற் கனுப்பிவிட்டு, பின்பு

பிறகு, அவள் பேணு - அவளைப் பாதுகாவாமலேயிருக்கிற, பேதையும் - அறிவிலானும், பதரே-குடிசெய்வோருட் பதராவன், எ-று.

(வி-ரை.) இல்லாளிடத் தன்புடையனுகக் கூடி அறஞ்செய்து இல்வாழ்வானுயின் அவ்வன்புடைமை வடிவாகவும் அறம் பயனுகவும் இல்வாழ்க்கை முற்றுப்பெற்று, அது அவனைத் தேவருள் ஒருவனுக்கற்பாலதாயிருக்க, முதலே யில்லாளை நீக்கி, இல்வாழ்க்கையுருவைக் குலைத்தலால் 'பதர்' என்ருர்.

இதற்குதாரணம்:—திருக்குறள்-இல்வாழ்க்கை-ரு -௪௦-ம் பாட்டுகள்,

"அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது." எனவும்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்." எனவும்

அன்பு அறன் இல்வாழ்க்கைக்குப் பண்பு பயனுதற்கும், அதன் பயன் அவனைத் தேவருள் ஒருவனுக்கற்கும் உதாரணம் முறையே காண்க. இன்னும்,

"மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமை."

என அவளிடத்து நற்குண நற்செய்கைகளும் நன்மக்கட்பேறும் இல்லாவிடினும், கொண்டவன் புறக்கழித்து வாழலாகாதெனப் பிறர் கூறுதலுங் காண்க. (௩௧)

32. தன்மனையாட்டியைத் தனியேயிருத்திப்
பிறன்மனைக்கேகும் பேதையும்பதரே.

(ப-ரை.) தன் மனையாட்டியை - தன் மனைவியை, தனியே இருத்தி - தனியே வைத்து, பிறன் மனைக்கு ஏகும் - அந்நியன் மனைவியை விரும்பி அவன் மனைக்குச் செல்கின்ற, பேதையும் - மூடனும், பதரே - பேதையருட் பதராவர், எ-று.

(வி-ரை.) பகை பாவம் அச்சம் பழி என்பவற்றை ளகப்பட்டுத் தான் கெடுவதுமன்றித் தன் மனைவியும் துன்புற் றழிதற்கேதுவாத லால் 'பதர்' என்றார். பகை முதலியவற்றாற் கெடுதற்குதாரணம்:— திருக்குறள் - பிறனில் விழையாமை - ௬ - ௨ - ம் பாட்டுகள்,

"பகைபாவ மச்சம் பழியென நான்கும்
இகவாவா மில்லிறப்பான் கண்."

"அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்."

எனப் பேதையநட் பதரென்பதற்கு முதாரணங் காண்க. (௩௨)

33. தன்னாயுதமுந் தன்கையிற்பொருளும்
பிறன்கையிற்கொடுக்கும் பேதையும்பதரே.

(ப-ரை.) தன் ஆயுதமும் - தன்னுடைய ஆயுதத்தையும், தன் கையில் பொருளும் - தன் கையிலுள்ள திரவியத்தையும், பிறன் கையில் கொடுக்கும் - ஒருசார்பு மில்லாத அந்நியன் கையிலே கொடுத்த, பேதையும் - மூடனும், பதரே - ஏமாறுவோருட் பதரானவன், எ-று.

(வி-ரை.) யாம் பண்டு விளையாடுஞ் சோலை யென்றாற்போலக் கொடுக்கும் பேதையென இறந்தகாலம் எதிர்காலமாக மயங்கி நின்றது. இனி இதற்குத் தன்னாயுதத்தையாயினுந் தன்கைப்பொருளை யாயினும் பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரெனினும் அமையும். பொருளைப் பிறன்கையிற் கொடுத்து அதனால்வரு மூதியத்தை யிழந்து துன்பத்தைக் கொண்டதனால் 'பேதை' என்றும், அதன்மேலும் தன் ஆயுதத்தையுங் கொடுத்து நிராயுதனானதனால் 'பதர்' என்றுங் கூறினர்.

இதற்குதாரணம்:—திருக்குறள் - பேதைமை - ௧ - ம் பாட்டு,

"பேதைமை யென்ப தொன்றியாதெனி னேதங்கொண்
டூதியம் போக விடல்."

எனத் துன்பத்தைக்கொண்டுதியமிழத்தற்குதாரணங் காண்க.

34. ஏந்திழையாரியலாத தந்திரங்கொடு
வாய்ந்ததென்றதின் முயல்வானுமோர்பதரே.

(ப-ரை.) ஏந்திழையார் - மனைவியரது, இயலாத - பொருந்தாத, தந்திரம் கொடு - உபாயத்தைக் கேட்டு, வாய்ந்தது என்று - இதுவே பொருத்தமான வுபாயமென்று எண்ணி, அதின் - அதனாலே, முயல்வானும் - ஒருகாரியத்தைச் செய்யத் தொடங்குவோனும், ஓர் பதரே - ஒப்பற்ற பதராவன், எ-று.

(வி-ரை.) அறிவோடு நாணு மிழந்து பெண்ணேவல் புரிதற்கமைந்த இவனது ஆண்டன்மையினும் அப்பெண்டன்மை சிறந்ததலின், மேற்கூறிய பலவகைப் பதருள்ளுந் தாழ்ந்த பதரென்பார் 'ஓர்பதர்' என்றார். இதற்குதாரணம்:—

திருக்குறள் - பெண்வழிச்சேறல் - எ - ம் பாட்டு,

"பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து." (௩௪)

35. (1) வாய்ப்பறையாகவு நாக்கடிப்பாகவும்
சாற்றுவதொன்றைப் போற்றிக்கேண்மின்;

(2) பொய்யுடையொருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே மெய்போலும்மே;

(3) மெய்யுடையொருவன் சொன்மாட்டானேல்
பொய்போலும்மே பொய்போலும்மே;

அதனால்,

(4) இருவர்தஞ்சொல்லையு மெழுதரங்கேட்டு
இருவரும்பொருந்த வுரையானையின்
மனுமுறைநெறியின் வழக்கிழந்தவர்தாம்
மனமுறமறுகிநின் றழுதகண்ணீர்

முறையுறத்தேவர் மூவர்காப்பினுமுடம்
வழிவழியீர்வதோர் வாளாகும்மே;
(5) பழியாவருவதூஉ மொழியாதொழிவது;
(6) சுழியாவருபுன லிலியாதொழிவது.

(பதவுரை முதலியன.)

(1) வாய் பறைய்ாகவும் - என் வாயே ஒருபறையாகவும், நாகடிப்பாகவும் - அதனுள்ளிருக்கிற நாவே அந்தப் பறையடிக்குங் குறுந்தடியாகவும், (உறுதியாக அறைந்து) சாற்றுவது ஒன்றை-என்னால் சொல்லப்படுவதொன்றை, போற்றி கேண்மின் - (உங்களுடைய மனம் வேறொரு விடயத்திற் செல்லாமலே அதனைப்) பாதுகாத்துக் கேளுங்கள்;—

பறையறைந்தபின் உலகிற்கு ஒன்றைத் தெரிவித்தல் உலகியலாதலால் 'வாய்ப்பறையாகவு நாக்கடிப்பாகவும்' என்றவுடனே சாற்றுவது என்றது சொல்லுவதாதலால், அதன்முன் அறைந்து என்பது சொல்லெச்சமாய்க் குறைந்து நின்றது. அது யாதெனின்,

(2) பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால் - உள்ளே பொய்யை வைத்திருக்க ஒருவன் பேசுகிற சொல்வலியினாலே, மெய்போலும்மே மெய்போலும்மே - மெய்போலவே தோன்றும் மெய்போலவே தோன்றும்;—

உறுதிப்பொருள் தோன்றற்கு மெய்போலும்மே யென்றது அடுக்கிநின்றது. போலும்மே யென மகரவொற்று விரித்தல் விகாரம். ஏகாரத்தை மாறிக் கூட்டுக.

(3) மெய்யுடை ஒருவன் - மெய்யை யுள்ளேவைத்திருந்த ஒருவன், சொல்மாட்டானேல் - அது மெய்யென்று விளங்கச் சொல்லமாட்டானாயின், பொய்போலும்மே பொய்போலும்மே - பொய்போலவேதோன்றும் பொய்போலவே தோன்றும்;—

சொலமாட்டானேல் என்பது சொல்மாட்டானேல் என அகரங் குறைந்துநின்றது. ஒழிந்தனவற்றிற்கு மேற்சொல்லியபடி யில

க்கணங் காண்க. இவ்விரண்டையு மேதுவாகக் கொண்டு அதனால் என்பதனோடு கூட்டி இனிவருவனவற்றோ டொட்டுக.

(4) வழக்குரைக்க வந்த இருதிறத்தாருடைய வாய்மொழிகளை யும் ஒருவன் ஏழுதர மடக்கி மடக்கிக் கேட்டு, பிறகு மநுநீதி நெறி யோடு பொருந்தும்படி அவ்விருவர்க்கும் வழக்குத் தீர்ப்புச் சொல்ல வேண்டும். அவ்வாறு சொல்லானாயின், மநுமுறைநெறியிற் பொரு ந்த வுரையானாயி னெனக் கூட்டுக. முறை - நீதியென்பதை,

திருக்குறள் - செங்கோன்மை - எ - ம் பாட்டு,

"இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்."

என்பதனாற் காண்க. பொருந்த என்னும் வினையெச்சம் நெறி யொடு என்னு மூன்றனுருபையும் இருவர்க்கும் என்ற குவ்வுருபை யும் முடித்து நிற்றலின், உருபு பலவடுக்கி யொருபயனிலை கொண் டதெனக் காண்க. இருவர்க்கும் பொருந்த வுரையானாயின் எனவே ஒருவர்க்குப் பொருந்த வுரைப்பானாயின் என்பது அருத்தாபத்தி யாற் பெறப்பட்டது. படவே அதனாலேயெனக் காரணங் கண்டு, கண்ணீர் வாளாகுமெனச் செயற்கைப் பொருள் காரண முன்வர ஆக்கம் பெற்றதெனக் காண்க.

வழக்கிழந்துவிட்ட மற்றொருவருடைய மனமானது மிகுதியா ய்க் கலங்கித் திகைத்துநின்று அழப்படுங் கண்ணீரானது ஒழுங்கு பட எல்லாக் கடவுளரோடுங்கூட அரி அரன் அயன் என்னு மூவ ரும் வந்து, அவ்வொருதலை சாய்ந்து வழக்குத் தீர்ப்புச் சொன்னவ னைக் காக்கப்புகினும், (அக்காவலாற் பயனின்றி) அவனையும் அவன் பின் அவன் சந்ததியிலே தோன்றினவர் தோன்றுவோராகிய எல் லாரையும் பிளந்துகொண்டே வருவதோர் ஈர்வாளாகும்;—

வழிவழி யென்றதனால் இனித் தோன்றுமவரையு மென்பது பெறப்பட்டது. வழி என்பது சந்ததிக்கும் பின் என்பதற்கும் பெ யர். தேவர் மூவர் - தேவரோடு மூவர். வழிவழி - வழியின் வழி. இதில் இறந்தது தழீஇய வெச்சவும்மை தொக்குநின்றது. அதனால்

அவனையும் அவன் வழியின் வழியையும் எனப் பொருள்கொள்க. கண்ணீர் வாளாகும் என்றது ஏகதேச வுருவகவணி. (அதுவு மன்றி),

(5) நிலைத யென்பதுமோ எக்காலமும் வருவதும் ஒழிவதும் ஒழியாது;—

இறுதியிலும்மை விகாரத்தாற் றொக்கது; பழியா வருவது மொழிவது மொழியாது எனக் கூட்டுக. பழியு மொன்றின்பின் னொன்றாக வந்துகொண்டேயிருக்கு மென்பது கருத்து.

(6) சுழித்து வரும் நீர்த்திரையானது ஒழிவதேது, எ-று.

யாது என்னும் ஐயக்கிளவி யிங்கே இன்மை குறித்து நின்றது. இதுபோலப் பழியாவருவது மொழிவது மொழியாது என இவ்வெடுத்துக்காட்டுவமையை முற்கூட்டி யிதன் பொருளாகிய பழியாவருவது மொழிவது மொழியாது என்பதைப் பிற்கூட்டுக. வாய்ப்பறை என்பதுமுதல் சுழியாவருபுன லலையாதொழிவது என்பதனளவு மொருதொடர். இதனுள் முன்னைய விரண்டடியும் தனிநின்றுபொருள் முற்றினும் இன்ன தென்னுமையிற் றொகுத்துச் சுட்டலெனவும், மற்றபொய்யுடை என்பது முதல் சுழியா ... என்பதனளவு மொருதொடராய் வகுத்துக்காட்டல் எனவுங் கொள்க. இவ்வகுத்துக்காட்டலுள் மெய்போலும்மே, பொய் போலும்மே, அதனால், உரையானுயின், அழுத கண்ணீர் வாளாகும்மே, அதுவுமன்றி, சுழியா வருபுன லலையா தொழிவது, அதுபோலப் பழியாவருவது மொழிவது மொழியாது எனக் கூட்டிநோக்கி அதனால் என்னுமேதுவுக்கு ஏழுதரங் கேட்டுப்பொருந்த வுரைத்தல்வேண்டுமெனப் பயனிலை வருவித்து, அவ்வாறு உரையாது ஒருதலை பொருந்த வுரைப்பானுயின், அதனால், ஒருதலை யழுதகண்ணீர் வாளாகும், பழியுமாகும் எனப்பொருள்கொண்டு, அது யாதெனின் என்னும் வினவுக்கு விடையாக்கிக்கொள்க. விரிவஞ்சி விடலாயிற்று. பிறவிலக்கணங்களுமுய்த்துணர்ந்து கொள்க. மநுமுறை நெறியி னிருவரும் பொருந்த வுரைத்தற் குதாரணம்:—

திருக்குறள் - நடுவுநிலைமை - அ - ம் பாட்டு,

"சமஞ்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி."

எனக்காண்க. இனி ஒருதலைபொருந்தவுரைத்தற்குகாரணம்:—
இக்குறளினுள் உவமையடை பொருளடைகளுள் உடன்பாட்டை
யெதிர்மறுத்தும் எதிர்மறையையுடன்பாடாக்கியுங்காண்க. என்னை;

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமையாது
ஒருபாற்கோடுத லிழிந்தோர்க்குப் பழி." என்க.

36. துணையோடல்லது நெடுவழிபோகேல்.

(பொ-ரை.) துணையோடுகூடிச் செல்வதன்றி, அஞ்சாமல் தனி
யே நெடுந்தூர வழியுள்ள வூருக்குச் செல்லாதை, எ-று.

(வி-ரை.) வழி - ஆகுபெயர். அஞ்சாமல் என்பது சொல்லெச்
சம். துணையோடல்லது என்றமையால் துணையோடு கூடியே செ
ல்லவேண்டுமென்பதும், நெடுவழிபோகேல் என்றமையால் சமீப
மாயிருக்கிற வூருக்குப்போகலாம் என்பதும்பெறப்பட்டன. துணை-
சகாயம் (வழித்துணை). (௩௬)

37. புணைமீதல்லது நெடும்புனலேகேல்.

(பொ-ரை.) தெப்பத்தின்மீதேறிச் செல்வதன்றி நீண்ட யாற்று
நீர் முதலியவற்றை அஞ்சாமல் நீந்திப்போகாதை, எ-று.

(வி-ரை.) அஞ்சாமல் நீந்தி யென்பது குறிப்பெச்சம். புணைமீ
தல்லது என்றமையால் புணைமீதேறியே செல்லல்வேண்டு மென்ப
தும், நெடும்புன லேகேல் என்றமையால், ஆழமில்லாத கொஞ்ச
நீரில் நீந்திச்செல்லலா மென்பதும் பெறப்பட்டன. (௩௭)

38. வழியேயேகுக வழியேமீளுக.

(பொ-ரை.) அவ்வாறு துணையோடு போகினும், புணைமீதேறிச்
செல்லினும், வழிவிலகுதற்கு மேன்மக்கள் அஞ்சவேண்டு மாத
லால் வழிதப்பாமலே போய் வழிதப்பாமலே திரும்புக, எ-று.

ஏகுகவென்னும் வியங்கோள் முற்றெச்சப்பொருள்பட நின்றது. இனி அவ்வாறு எனச் சுட்டாது பொதுப்பட வழிதப்பாமலே செல்க, வழிதப்பாமலே திரும்புக, விரைந்துபோகவேண்டினும் எனவுரைப்பினும் அமையும். இதற்கு விரைந்து போகவேண்டினும் என்பது இசையெச்சம். இம்மூன்றிற்குங் கருத்து: அஞ்சத் தகுவதற் கஞ்சுவது அறிவுடைமை யென்பதும், அஞ்சத்தகுவதற்கு அஞ்சாமை பேதைமை யென்பதுமாம்.

உதாரணம்:—திருக்குறள் - அறிவுடைமை - அ - ம் பாட்டு,

"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்." (௩அ)

39. இவைகாணுலகிற் கியலுமாறே.

(பொ-ரை.) இது புறனடை, உலகத்தார்க்கு நடக்கத்தக்க நெறிகளானவ இவைபோல்வன பிறவுமாம், எ-று.

(வி-ரை.) காண், ஏ - இரண்டும் அசைநிலைகள். ஆறு - தொகுதிபொருமை. போல்வன என்பது சொல்லெச்சமாய்க் குறைந்து நின்றது. இனி, இவைகாண் என்பதை இவைபோல்வன வெனக் காண்க என விரித்து, என இடைச்சொல் தொக்கு நின்றதெனக் கொண்டு காண் என்பதை முன்னிலை யேவலாக்கினும் அமையும். உலகநெறி முழுதும் இதனுளடங்காமையால் இவைகாண் என்பதை இவைபோல்வன பிறவு மென்றுரைத்து இதைப் புறனடையென வேண்டிற்றெனக் காண்க. (௩க)

40. வாழியநலனே வாழியநலனே.

(பொ - ரை.) எல்லா நன்மைகளும் வாழ்க. எல்லா இன்பங்களும் வாழ்க, எ-று.

(வி-ரை.) நலம் என்பது தொகுதி யொருமையாய் நன்மைகளையும் இன்பங்களையும் குறித்து நின்றது. ஏகாரமிரண்டும் அசைநிலைகள். இனி இவ்வாறன்றி நன்மையே வாழ்ந்திருக்கக் கடவது, நன்மையே வாழ்ந்திருக்கக் கடவது என உறுதி தோன்றற் பொருட்டுத் தேற்றேகாரமுங் கொடுத்து இருமடி வாழ்த்தினு ரெனினுமாம். இது வாழ்த்து. (௪0)

வெற்றிவேற்கையென்னும் நறுந்தொகை விருத்தியுரை
முற்றிற்று.